தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

முன்னிலை: திரு மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண் 335/மா/2025
நாள் 29.09.2026

வெ. ஸ்ரீதர்,
சென்னை–600 115. --- முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர், மண்டலம் 15,
பெரு நகர சென்னை மாநகராட்சி. --- எதிர் மனுதாரர்

சென்னை–600 115, ஈஞ்சம்பாக்கம், வெட்டுவாங்கேணி, கஸ்தூரிபாய் நகர், 2–வது தெரு, கதவு எண் 2/1789 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. V. ஸ்ரீதர் என்பவரின் 26.06.2025 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 26.06.2025 அன்று பெறப்பட்டு 335/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

ஆணை

சென்னை–600 115, ஈஞ்சம்பாக்கம், வெட்டுவாங்கேணி, கஸ்தூரிபாய் நகர், 2–வது தெரு, கதவு எண் 2/1789 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. V. ஸ்ரீதர் என்பவர் 26.06.2025 நாளிட்ட தனது மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:–

"முறையீட்டாளர், வெ. ஸ்ரீதர், இந்தியாவின் சட்டத்திற்கு உட்பட்ட குடிமகனாக, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 15, சோழிங்கநல்லூர், கோட்டம் 194, ஈஞ்சம்பாக்கம், கஸ்தூரிபாய் நகர் 2வது தெரு, கதவு எண் 2/1789–ல் கடந்த 23 ஆண்டுகளாக வசித்து வருகிறார். முறையீட்டாளர், பாரதிய ஜனதா கட்சி – தமிழ்நாடு, சென்னை கிழக்கு மாவட்டம், நீலாங்கரை பகுதி, ஈஞ்சம்பாக்கம் 194வது வட்ட செயலாளராகவும், ஒரு சமூக ஆர்வலராகவும் பொதுமக்களின் நலனுக்காகப் பணியாற்றி வருகிறார்.

ஈஞ்சம்பாக்கம் பகுதியில் சாலைப் பிரச்சினைகள், தெருவிளக்கு, குடிநீர் விநியோகம், கழிவுநீர், பொதுசுகாதாரம், மருத்துவம், மின்சார வாரியம், கூட்டுறவு உணவு பொருள் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நியாய விலைக் கடைகள் உள்ளிட்ட பல்வேறு பொதுமக்களின் பிரச்சினைகளுக்கு தொடர்ந்து தீர்வு காண முயற்சித்து இப்பகுதியின் முன்னேற்றத்திற்காக உழைத்து வருகிறார்.

கஸ்தூரிபாய் நகர் 2வது தெருவில் தெருப்பெயர் பலகை அமைக்கப்படாததால், முறையீட்டாளர் மற்றும் பிற குடியிருப்பாளர்களுக்கு ஏற்படும் பெரும் சிரமங்களைத் தீர்க்குமாறு கோருகிறார். இந்த அடிப்படை வசதியின் பற்றாக்குறை, சென்னை மாநகராட்சியின் நிர்வாகக் குறைபாடுகளாலும், குறிப்பாக ஈஞ்சம்பாக்கம் 194வது கோட்ட உதவி பொறியாளரின் அலட்சியப் போக்காலும் நீண்ட காலமாக தீர்க்கப்படாமல் உள்ளது. எதிர்மனுதாரர் எண் 4 (உதவி பொறியாளர், [கோட்டம் 194, ஈச்சம்பாக்கம்] மண்டலம் 15, சோழிங்கநல்லூர், பெருநகர சென்னை மாநகராட்சி) அவர்களின் பொறுப்பற்ற தன்மையே

இப்பிரச்சினையின் முதன்மைக் காரணமாக உள்ளது. எனவே இந்தப் பிரச்சினையைச் சரிசெய்ய, இந்த மாண்புமிகு முறைமன்றத்தின் உதவியை நாடி, இந்த மனுவை பணிவுடன் தாக்கல் செய்கின்றேன்.

(2) எதிர்மனுதாரர்கள் பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டலம் 15, சோழிங்கநல்லூரில் பொதுநிர்வாகப் பணிகளுக்கு பொறுப்பானவர்கள் ஆவர். இவர்கள் 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி முறைமன்ற நடுவர் சட்டத்தின் கீழ் இந்த மாண்புமிகு முறைமன்றத்தின் அதிகார வரம்பிற்கு உட்பட்டவர்கள் ஆவார்கள்.

(3) வழக்கின் உண்மைகள்:

(அ) முறையீட்டாளர், சென்னை, மண்டலம் 15, சோழிங்கநல்லூர், கோட்டம் 194, ஈஞ்சம்பாக்கம், கஸ்தூரிபாய் நகர் 2வது தெருவில் வசிக்கிறார். இத்தெருவில் தெருப்பெயர் பலகை இல்லாததால், முறையீட்டாளர் மற்றும் பிற குடியிருப்பாளர்கள் அஞ்சல் சேவைகள், அவசர சேவைகள் மற்றும் பார்வையாளர்களின் வருகை ஆகியவற்றில் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

(ஆ) கஸ்தூரிபாய் நகரில் 28 தெருக்கள் உள்ளன (2 பிரதான சாலைகள், 16 தெருக்கள், 6 சந்துகள், 4 குறுக்கு தெருக்கள்). 2021 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சியால் 21 தெருக்களுக்கு தெருப்பெயர் பலகைகள் அமைக்கப்பட்டன. ஆனால் கஸ்தூரிபாய் நகர் 2வது தெரு, 12வது தெரு, 2வது பிரதான சாலை மற்றும் சில குறுக்கு தெருக்கள் விடுபட்டன. 2024 ஆம் ஆண்டு கஸ்தூரிபாய் நகர் 12வது தெரு மற்றும் 2வது பிரதான சாலையில் புதிய தெருப்பெயர் பலகைகள் அமைக்கப்பட்டன. ஆனால் கஸ்தூரிபாய் நகர் 2வது தெரு மட்டும் தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டுள்ளது.

(இ) கோட்டம் 194–ல் உள்ள கற்பக விநாயகர் நகர், மகாத்மா காந்தி நகர், கணேஷ் நகர், புது கணேஷ் நகர், திருவள்ளுவர் நகர், ராமலிங்கா நகர், பாரதி தெரு, கோபிநாத் நகர், ஹனுமான் காலனி, ராஜன் நகர், செல்வா நகர், செல்வா நகர் விரிவாக்கம் ஆகிய பகுதிகளில் தெருப்பெயர் பலகைகள் அமைக்கப்பட்டு, ஏற்கனவே உள்ள பலகைகள் மாதந்தோறும் புதுப்பிக்கப்படுகின்றன. கஸ்தூரிபாய் நகர் 2வது தெருவின் இந்த புறக்கணிப்பு, சென்னை மாநகராட்சியின், குறிப்பாக எதிர்மனுதாரர் எண் 4–ன் பாகுபாடான அணுகுமுறையை வெளிப்படுத்துகிறது.

(ஈ) தெருப்பெயர் பலகை இல்லாததால் ஏற்படும் பிரச்சனைகள்:

அஞ்சல் சேவைகள்: தெருப்பெயர் பலகை இல்லாததால் கூரியர், அஞ்சல் மற்றும் பிற சேவைத் துறையினர் தெருவினை அடையாளம் காண முடியாமல் அவதிப்படுகின்றனர். இதனால் அஞ்சல் விநியோகம் மற்றும் பிற சேவைகள் கிடைப்பது எங்களது குடியிருப்பு பகுதிக்கு தாமதமாகிறது.

அவசர சேவைகள்: ஆம்புலன்ஸ், தீயணைப்பு சேவைகள் மற்றும் பிற அவசர கால சேவைகள் தெருவைக் கண்டறிவதில் சிரமப்படுவது, குடியிருப்பாளர்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்.

பொதுமக்களின் சிரமங்கள்: தெருப் பெயர் பலகை பொருத்தப் படாததால் தெருவினை கண்டறிய முடியாமல் புதியதாக இப்பகுதிக்கு வருவோர் பல மணி நேரம் அலைந்து அவதியுறுகின்றனர்.

(உ) சென்னை மாநகராட்சி, "சிங்கார சென்னை 2.0" திட்டத்தின் கீழ் 2022 ஆம் ஆண்டிலிருந்து வார்டு மறுவரை செய்யப்பட்டதிலிருந்து புதிய தெருப் பெயர் பலகைகளில் சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் இலட்சினை, கோட்டம் எண், அஞ்சல் குறையீட்டு எண்ணுடன் உயர்தர தெருப்பெயர் பலகைகளை பேருந்து

சாலைகளிலும், உட்புற சாலைகளிலும் பெருநகர சென்னை மாநகராட்சி முழுவதும் அமைக்க பேருந்து சாலை துறையானது ஒப்பந்தப்புள்ளி கோரியது மண்டலம் 15–க்கு ஒப்பந்தம் பெற்ற SBA Infra Tech Service Pvt. Ltd. நிறுவனம், கோட்டம் 194–ல், குறிப்பாக கஸ்தூரிபாய் நகர் 2வது தெருவில், மந்தமாகவும் ஒழுங்கற்ற முறையிலும் செயல்பட்டு வருகிறது.

(ஊ) முறையீட்டாளர், ஆகஸ்ட் 2024 முதல் இப்பிரச்சினையை தீர்க்க பல முயற்சிகளை மேற்கொண்டுள்ளார்.

மேயர், ஆணையாளர், வட்டார துணை ஆணையர், மண்டல அலுவலர், செயற்பொறியாளர், உதவி செயற்பொறியாளர், உதவி பொறியாளர் ஆகியோருக்கு கடிதங்கள், அஞ்சல் அட்டைகள் மற்றும் இணைய வழியாக புகார்கள் அளித்தல்.

மாநகராட்சியின் இணையதளத்தில் புகார்கள் பதிவு செய்து, ஒதுக்கப்பட்ட புகார் எண்ணைப் பயன்படுத்தி நினைவூட்டல்கள் அனுப்புதல்.

மாநகராட்சியின் கட்டுப்பாட்டு அறை (1913) மூலம் பலமுறை புகார்கள் பதிவு செய்து பின்தொடர்தல்.

முதல்வரின் முகவரி துறையில் மனு அளித்தல்.

எதிர்மனுதாரர் எண் 4–ஐ கைபேசி மற்றும் நேரடி தொடர்பு மூலம் பலமுறை அணுகி, தெருப்பெயர் பலகை அமைக்கக் கோருதல்; ஆனால், "10 அல்லது 15 நாட்களில் நடவடிக்கை எடுக்கப்படும்" என்ற வெற்று உறுதிமொழிகள் மட்டுமே பெறப்பட்டன.

(எ) எதிர்மனுதாரர் எண் 4–ன் தொடர்ச்சியான அலட்சியமும், முறையீட்டாளரின் புகார்களுக்கு பதிலளிக்கத் தவறியதும் நிர்வாக பற்றாக்குறையையும் பொறுப்பற்ற தன்மையையும் வெளிப்படுத்துகிறது.

(4.) முறையீட்டின் அடிப்படைகள் :

அ) சட்டமீறல்: சென்னை மாநகராட்சி சட்டம், 1919, பிரிவு 63 மற்றும் 64–ன்படி, தெருப்பெயர் பலகைகளை அமைப்பது மாநகராட்சியின் சட்டரீதியான கடமையாகும். எதிர்மனுதாரர்கள், குறிப்பாக எதிர்மனுதாரர் எண் 4, இந்தக் கடமையை முற்றிலும் புறக்கணித்து, சட்டத்தை மீறியுள்ளனர்.

ஆ) நிர்வாக அலட்சியம்: எதிர்மனுதாரர் எண் 4–ன் செயல்படாமை, பல புகார்களையும் பின்தொடர்தல்களையும் பரிசீலிக்காமல் புறக்கணித்தது, மோசமான நிர்வாக பற்றாக்குறையையும், நல்லாட்சி கொள்கைகளை மீறுவதையும் காட்டுகிறது.

இ) பாகுபாடு மற்றும் சமத்துவமின்மை: கஸ்தூரிபாய் நகரில் 28 தெருக்களில் 27–க்கு தெருப்பெயர் பலகைகள் அமைக்கப்பட்டுள்ள நிலையில், முறையீட்டாளரின் தெரு மட்டும் புறக்கணிக்கப்பட்டுள்ளது. இது இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பிரிவு 14–ன் கீழ் சமத்துவ உரிமையை மீறுவதாகும்.

ஈ) அடிப்படை உரிமைகளின் மீறல்: தெருப்பெயர் பலகை இல்லாதது, அஞ்சல் மற்றும் அவசர சேவைகளைப் பெறுவதற்கு தடையாக உள்ளது. இது இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பிரிவு 21–ன் கீழ் முறையீட்டாளரின் வாழ்வுரிமையை பாதிக்கிறது.

உ) **பொறுப்பு இன்மை:** எதிர்மனுதாரர் எண் 4–ன் தொடர்ச்சியான செயல்படாமையும், புகார்களுக்கு பதிலளிக்கத் தவறியதும், பொறுப்பு மற்றும் பதிலளிக்கும் தன்மையின் பற்றாக்குறையை வெளிப்படுத்துகிறது.

(5.) முறையீட்டின் அவசியம்,

அ) **பொதுமக்களின் நலன் :** இப்பிரச்சினை முறையீட்டாளரின் தனிப்பட்ட பிரச்சினை மட்டுமல்ல. கஸ்தூரிபாய் நகர் 2வது தெருவில் வசிக்கும் அனைத்து குடியிருப்பாளர்களையும் பாதிக்கிறது.

ஆ) **நிர்வாக மேம்பாடு :** இந்த முறையீடு, சென்னை மாநகராட்சியின் நிர்வாக குறைபாடுகளையும், எதிர்மனுதாரர் எண் 4–ன் அலட்சியத்தையும் சரிசெய்யவும், பொது நிர்வாகத்தில் பொறுப்பு மற்றும் திறனை மேம்படுத்தவும் முன்மாதிரியாக அமையும்.

இ) **சமத்துவத்தை உறுதி செய்தல் :** முறையீட்டாளரின் தெருவின் புறக்கணிப்பு, பாகுபாடான அணுகுமுறையை வெளிப்படுத்துகிறது. இந்த முறையீடு, அனைத்து குடிமக்களுக்கும் சமமான அடிப்படை வசதிகளை உறுதி செய்யும்.

ஈ) **எதிர்மனுதாரர் எண் 4–ன் பொறுப்பு :** உதவி பொறியாளரின் அலட்சியமே இப்பிரச்சினைக்கு முதன்மைக் காரணம் . இந்த முறையீடு, அவரை பொறுப்புக் கூற வைக்கும்.

(6.) முறையீட்டாளர், தெருப்பெயர் பலகை அமைக்கப்படாதது சட்ட விரோதமானது. நியாயமற்றது மற்றும் சட்டரீதியான மற்றும் அரசியலமைப்பு கடமைகளை மீறுவதாக உள்ளது என வாதிடுகிறார். முறையீட்டாளர் முதல் பார்வையில் வலுவான வழக்கை நிறுவியுள்ளார். மேலும் தொடர்ந்து செயல்படாமல் இருப்பது முறையீட்டாளருக்கும் பிற குடியிருப்பாளருக்கும் மீளமுடியாத பாதிப்பை ஏற்படுத்தும்.

(7.) முறையீட்டாளர், இந்த மாண்புமிகு முறைமன்றத்திலோ அல்லது வேறு எந்த மன்றத்திலோ இதே நிவாரணங்களை கோரி வேறு எந்த மனுவும் தாக்கல் செய்யவில்லை.

(8.) முறையீட்டார், இந்த முறையீட்டின் விசாரணையின்போது கூடுதல் காரணங்களை சேர்க்கவோ, மாற்றவோ, திருத்தவோ உரிமையை ஒதுக்கி வைக்கிறார்.

(9.) இந்த முறையீடு நல்லெண்ணத்துடனும், நீதியின் நலனுக்காகவும் தாக்கல் செய்யப்படுகிறது.

வேண்டுகோள்

மேற்கூறியவற்றின் முறையீட்டின் அடிப்படையில் மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்கள் பின்வருவனவற்றை அருள்கூர்ந்து உத்தரவிடுமாறு பணிவுடன் வேண்டப்படுகிறது.

(அ) பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்–15 சோழிங்கநல்லூர்–ஈஞ்சம்பாக்கம் (கோட்டம் 194) கஸ்தூரிபாய் நகர் 2–வது தெரு, வெட்டுவாங்கேணி, ஈஞ்சம்பாக்கம், சென்னை 600 115–ல் "சிங்கார சென்னை 2.0" திட்டத்தின்கீழ் உடனடியாக தெருப்பெயர் பலகை அமைக்க எதிர் மனுதாரர்களுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட வேண்டும்.

(ஆ) எதிர் மனுதாரர் எண் 4, உதவி பொறியாளர், தெருப்பெயர் பலகை அமைப்பதில் தாமதம் மற்றும் அலட்சியத்திற்கு விளக்கம் அளிக்கவும், அவரது கடமை தவறலுக்கு தேவையான நிர்வாக நடவடிக்கைகளை பரிந்துரைக்கவும் உத்தரவு பிறப்பிக்கப்பட வேண்டும்.

(இ) மண்டலம் 15, கோட்டம் 194–ல் தெருப்பெயர் பலகை அமைக்கும் பணிகளை விரைவுபடுத்தவும், ஒப்பந்ததாரரான SBA Infra Tech Service Pvt. Ltd- ன் செயல்பாடுகளை ஆய்வு செய்யவும் எதிர் மனுதாரர்களுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட வேண்டும்.

(ஈ) தெருப்பெயர் பலகை அமைக்கும் செயல்முறையை மேம்படுத்துவதற்கு வழிகாட்டுதல்களை உருவாக்க சென்னை மாநகராட்சிக்கு உத்தரவு பிறப்பிக்கப்படவேண்டும்.

(உ) இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்ட 15 நாட்களுக்குள் தெருப்பெயர் பலகை அமைக்க எதிர் மனுதாரர்களுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட வேண்டும்.

(ஊ) இந்த வழக்கின் உண்மைகள் மற்றும் சூழ்நிலைகளின் அடிப்படையில், நீதி மற்றும் நியாயத்தின் நலனுக்காக இந்த மாண்புமிகு முறைமன்றம் பொருத்தமாக கருதும் பிற உத்தரவுகளை பிறப்பிக்கப்படவேண்டும்.

இந்த மாண்பான செயலுக்கு, முறையீட்டாளர் கடமைப்பட்டவனாக எப்போதும் வேண்டுவார்.''

2. மேற்கண்ட மனுதாரர் தனது 26.06.2025 நாளிட்ட தனது அவசர மனுவில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:–

''இந்த முறையீட்டு மனுவை உடனடியாக அவசர முறையீட்டு மனுவாக பதிவு செய்யுமாறு மாண்மைமிகு முறைமன்றத்தின் உரிய சட்டவிதிகளின்படி வரும் 2025 ஜூலை மாதத்திலே விசாரணைக்கு பட்டியலிட பரிசீலிக்கும் படியும் மிகவும் பணிவுடன் வேண்டுகிறேன்.

அவசரத்தின் காரணங்கள் :

- ❖ கஸ்தூரிபாய் நகர் 2வது தெருவில் தெருப்பெயர் பலகை இல்லாததால், அஞ்சல் சேவைகள், அவசர வேலைகள் (ஆம்புலன்ஸ்) மற்றும் பொதுமக்களின் பாதுகாப்பு பாதிக்கப்பட்டுள்ளன.
- ❖ இது நீண்ட காலமாக தீர்க்கப்படாமல் உள்ளதால், உயிர் பாதுகாப்பு அபாயம் உள்ளது.
- ❖ உடனடி நடவடிக்கை இல்லாவிட்டால், மக்களின் அடிப்படை உரிமைகள் மேலும் பாதிக்கப்படும்.

எனவே, இந்த முறையீட்டு மனுவினை அவசர விசாரணைக்கு பட்டியலிடும்படி வேண்டுகிறேன்.''

3. மனுதாரர் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 03.10.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 15–ன் மண்டல அலுவலரிடம் கோரப்பட்டது. ஆனால் அறிக்கை ஏதும் பெறப்படவில்லை.

4. எனினும், மனுதாரர் மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சிகள் அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 21.08.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 27.07.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 15–ன் உதவி ஆணையர் (முதுநிலை) மற்றும் செயற்பொறியாளர் ஆகியோர் தங்களது 18.08.2026 நாளிட்ட அறிக்கையில் பின்வருமாறு தெரிவித்துள்ளனர்:–

''பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் –15, பகுதி–44, கோட்டம்–194, ஈஞ்சம்பாக்கம், கஸ்தூரிபாய் நகர் 2வது தெருவில் பெயர் பலகை 06.02.2026 அன்று பொருத்தப்பட்டுள்ளது என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. இத்துடன் புகைப்படம் இணைக்கப்பட்டுள்ளது.

எனவே, தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் மேற்கண்ட விளக்கத்தினை தங்களுக்கு பணிவுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது."

6. மனுதாரர் 20.08.2026 நாளிட்ட மின்னஞ்சலில் எழுத்துபூர்வமான வாதுரை அனுப்பியுள்ளதாக தெரிவித்துள்ளார். 21.08.2026 அன்று நடைபெற்ற விசாரணையின் போது சமர்ப்பிக்கப்பட்ட எழுத்துபூர்வமான வாதுரையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"(1.) முறையீட்டு மனுதாரரான வெ. ஸ்ரீதர், பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்–15, கோட்டம்–194, ஈஞ்சம்பாக்கம், கஸ்தூரிபாய் நகர் 2–வது தெருவில் கடந்த 24 ஆண்டுகளுக்கும் மேலாக தனது குடும்பத்துடன் வசித்து வரும் சட்டத்திற்குக் கட்டுப்பட்ட இந்தியக் குடிமகன் ஆவார். மனுதாரர் அப்பகுதி பொதுமக்களின் குடிமை வசதிகள், குடிநீர், சாலை, தெருப்பெயர் பலகை, தெருவிளக்கு, சுகாதாரம் உள்ளிட்ட அடிப்படை வசதிகளுக்காக தொடர்ந்து பல்வேறு அரசு அமைப்புகளிடம் சட்டப்பூர்வமான முறையில் மனுக்கள் அளித்து வரும் பொதுநலச் செயல்பாட்டாளராகவும் உள்ளார்.

(2.) கோட்டம் 194, ஈஞ்சம்பாக்கம், உட்பட்ட கஸ்தூரிபாய் குடியிருப்புப் பகுதியில் (2 பிரதான சாலைகள், 16 தெருக்கள், 6 சந்துகள் மற்றும் 4 குறுக்குத் தெருக்கள்) என மொத்தம் 28 சாலைகள் உள்ளன. கடந்த 2021 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் பெருநகர சென்னை மாநகராட்சியால் இப்பகுதியில் உள்ள 27 தெருக்களுக்கு தெருப்பெயர் பலகைகள் அமைக்கப்பட்டன. இருப்பினும், எந்தவித நியாயமான காரணமும் இல்லாமல் கஸ்தூரிபாய் நகர் 2–வது தெரு மட்டும் திட்டமிட்டு புறக்கணிக்கப்பட்டு, தெருப்பெயர் பலகை அமைக்கப்படாமல் விடப்பட்டது. இந்த பாகுபாடான அணுகுமுறை இவ்வழக்கின் அடிப்படைச் சங்கதியாகும். சட்டப்பூர்வமாக, சென்னை மாநகராட்சிச் சட்டம், 1919–ன் பிரிவு 228(1) & (2)–ன்படி, ஒவ்வொரு பொதுத் தெருவிற்கும் பெயர் சூட்டுவது பெயர் பலகை அமைப்பதும் அதைப் பராமரிப்பதும் மாநகராட்சியின் கட்டாயச் சட்டரீதியான கடமையாகும். (Statutory Duty); இக்கடமையைச் செய்யத் தவறியது நேரடி சட்ட மீறலாகும்.

(3.) தெருப்பெயர் பலகை இல்லாத காரணத்தால், அஞ்சல் துறை, கூரியர் நிறுவனங்கள், இணையவழி வர்த்தக நிறுவனங்களின் விநியோகப் பணியாளர்கள், அவசர மருத்துவ சேவைகள் (108 ஆம்புலன்ஸ்), தீயணைப்புத் துறை, காவல் துறை மற்றும் பிற அரசு சேவை அமைப்புகள் கஸ்தூரிபாய் நகர் 2–வது தெருவை அடையாளம் காண முடியாமல் கடுமையான சிரமங்களை எதிர்கொண்டன. இதன் விளைவாக, அப்பகுதி மக்களின் அன்றாட வாழ்க்கை மட்டுமல்லாமல், அவசரகால பாதுகாப்பும் பாதிக்கப்பட்டது. ஒரு தெருப் பெயர் பலகை என்பது வெறும் அடையாளப் பலகை அல்ல; அது குடிமக்களின் உயிர், பாதுகாப்பு மற்றும் அரசின் அடிப்படை சேவைகளைப் பெறும் உரிமையுடன் நேரடியாகத் தொடர்புடைய பொது உள்கட்டமைப்பு ஆகும்.

(4.) மேற்கண்ட குறைபாட்டைச் சரிசெய்ய மனுதாரர் ஆகஸ்ட் 2024 முதல் தொடர்ந்து பல்வேறு அரசு அதிகாரிகளிடம் சட்டப்படி மனுக்கள் அளித்தார். அவை ஒரு தனி அலுவலகத்திற்கு மட்டும் அனுப்பப்பட்டவை அல்ல. இந்தியக் குடியரசுத் தலைவர் செயலகம், இந்திய பிரதமர் அலுவலகம், மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம், தமிழ்நாடு முதலமைச்சரின் முகவரித் துறை, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர், மாநகராட்சி மேயர், வட்டார துணை ஆணையர் (தெற்கு), மண்டல அலுவலர், செயற்பொறியாளர், உதவி செயற்பொறியாளர், உதவி பொறியாளர், மாநகராட்சி கட்டுப்பாட்டு துறை (1913) GCC Grievance Portal உள்ளிட்ட பல்வேறு தளங்கள் வாயிலாக மனுக்கள் அனுப்பப்பட்டன. இவை அனைத்தும் அசல்

மனுவுடன் இணைக்கப்பட்டுள்ள முறையீட்டு மனுதாரர் சான்று ஆவணங்கள் எண் 1 முதல் 23 வரையிலான ஆவணங்கள் மூலம் நிரூபிக்கப்படுகின்றன.

(5.) மனுதாரர் அளித்த மனுக்கள் ஒவ்வொன்றும் நிர்வாகத்தின் பல்வேறு நிலைகளுக்கு சென்ற போதிலும், பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அவை மீண்டும் மண்டலம்–15 அலுவலகத்திற்கே அனுப்பப்பட்டன. அங்கு உண்மையான கள ஆய்வு மேற்கொள்ளப்படாமல், புகாரின் பொருளைச் சரிபார்க்காமல், அதிகாரப்பூர்வ இணைய தளங்களில் உண்மைக்குப் புறம்பான தகவல்கள் பதிவேற்றப்பட்டு, புகார்கள் முடிக்கப்பட்டன. இதனால், மனுதாரர் தொடர்ந்து அளித்த புகார்கள் நிர்வாக ரீதியாக விசாரிக்கப்படாமல், வெறும் "கோப்பு முடித்தல்" (File Closure) என்ற நடைமுறையிலேயே முடிக்கப்பட்டன. இத்தொடர் நிகழ்வுகளின் விவரம் ஆவணங்களின் மூலம் நிரூபனம் ஆகின்றன.

(6.) குறிப்பாக, கோட்டம்–194 உதவி பொறியாளராகப் பணியாற்றிய திரு. சந்திரசூடன் (எதிர்மனுதாரர் 4), ஒரே பிரச்சினை தொடர்பாக, மனுதாரர் சமர்ப்பித்துள்ள ஆவணங்களில் இடம்பெற்றுள்ளபடி, குறைந்தது ஐந்து வெவ்வேறு அரசு தளங்களில் "பணி முடிந்தது", "தெருப்பெயர் பலகை அமைக்கப்பட்டுள்ளது", "தவறான பலகை அகற்றப்பட்டுள்ளது", "Already Arranged". "In Process" போன்ற ஒன்றுக்கொன்று முரண்பட்ட பதில்களைப் பதிவு செய்துள்ளார். ஆனால் 26.06.2025 அன்று மனுதாரர் நேரடியாக எடுத்த புகைப்படங்களில், கஸ்தூரிபாய் நகர் 2–வது தெருவில் எந்த தெருப்பெயர் பலகையும் அமைக்கப்படவில்லை என்பது தெளிவாக நிரூபிக்கப்பட்டது. எனவே, அதிகாரப்பூர்வ பதிவுகளில் இடம் பெற்றிருந்த அந்த பதில்கள் அனைத்தும் உண்மையான களநிலையுடன் பொருந்தாதவை என்பது ஆவணங்கள் மூலம் வெளிப்படுகிறது.

(7.) மனுதாரர் அளித்த புகார்கள் அனைத்தும் ஒரே நாளில் அல்லது ஒரே துறைக்கு மட்டும் அளிக்கப்பட்டவை அல்ல; மாறாக, பல மாதங்களாகத் தொடர்ச்சியாக, பொறுமையுடனும் சட்டப்பூர்வமான நடைமுறைகளைப் பின்பற்றியும் அளிக்கப்பட்டவை. இருப்பினும், ஒவ்வொரு மனுவும் மேல்மட்ட அதிகாரிகளிடம் சென்றபோதும், இறுதியில் அவை மீண்டும் மண்டலம்–15 அலுவலகத்திற்கே அனுப்பப்பட்டன. அங்கு, சம்பந்தப்பட்ட கள அலுவலரிடமிருந்து பெறப்பட்ட அறிக்கையை எந்தவித சுயாதீன ஆய்வும் இன்றி அப்படியே ஏற்றுக்கொண்டு மேல்மட்ட அதிகாரிகள் மனுக்களை முடித்தனர். இதன் விளைவாக, உண்மை நிலையை ஆய்வு செய்ய வேண்டிய நிர்வாக அமைப்பே, கீழ்மட்ட அதிகாரியின் தவறான அறிக்கையை உறுதிப்படுத்தும் கருவியாக செயல்பட்டது; இது நிர்வாகக் கண்காணிப்பு முறையே செயலிழந்துள்ளதை வெளிப்படுத்துகிறது.

(8.)மனுதாரர் அளித்த மனுக்களின் காலவரிசையைப் பரிசீலித்தால், பிரச்சினைக்குத் தீர்வு காணும் நோக்கத்தை விட, புகார்களை நிர்வாக ரீதியாக முடித்து வைப்பதற்கே முன்னுரிமை அளிக்கப்பட்டிருப்பது தெளிவாகிறது. இதனால் அதிருப்தியுற்று, மனுதாரர் 26.06.2025 அன்று இம்மாண்புமிகு முறைமன்ற நடுவத்தில் முறையீட்டு மனு எண் 335/மா/2025–ஐத் தாக்கல் செய்தார். அதே நாளில், தாக்கல் செய்யப்பட்ட மனுவின் நகல் மண்டல அலுவலர் மற்றும் சம்பந்தப்பட்ட உதவி பொறியாளருக்கும் அனுப்பப்பட்டது. இதற்கு முன்னர் சுமார் பத்து மாதங்களாக எந்த நடவடிக்கையும் எடுக்காத அதிகாரிகள், மனு தாக்கல் செய்யப்பட்ட மறுநாளே, அதாவது 27.06.2025 அன்று தெருப்பெயர் பலகையை அமைத்தனர். இந்த ஒரு நிகழ்வே, மனுதாரர் அளித்த அனைத்துப்

புகார்களும் நியாயமானவை என்பதையும், அதிகாரிகள் முன்னதாக நடவடிக்கை எடுக்காமல் இருந்ததையும் மிக வலுவாக வெளிப்படுத்துகிறது.

(9.) இதனால், இவ்வழக்கில் உள்ள மையக் கேள்வி "தெருப்பெயர் பலகை அமைக்கப்பட்டதா?" என்பது அல்ல. மாறாக, ஏன் பத்து மாதங்களுக்கும் மேலாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை? ஏன் பல்வேறு அரசு தளங்களில் உண்மைக்கு மாறான பதில்கள் பதிவு செய்யப்பட்டன? ஏன் முறைமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்ட பின்னரே நிர்வாகம் செயல்பட்டது? என்பதை இவ்வழக்கின் உண்மையான சட்டபூர்வப் பிரச்சினையாகும். இதற்கான பதிலை வழங்குவது எதிர்மனுதாரர்களின் கடமையாகும்; அதை ஆய்வு செய்து உரிய முடிவை எடுப்பது இம்மாண்புமிகு முறைமன்றத்தின் அதிகார வரம்பிற்குள் வருகிறது.

(10.) மேலும் குறிப்பிடத்தக்கது என்னவென்றால், இம்மாண்புமிகு முறைமன்றத்தின் தலையீட்டின் விளைவாக 27.06.2025 தெருப்பெயர் பலகை அமைக்கப்பட்டாலும், அதன் பிறகு எதிர்மனுதாரர்களின் நிர்வாக அணுகுமுறையில் எந்தவித மாற்றமும் ஏற்படவில்லை. மாறாக, அதே கஸ்தூரிபாய் நகர் 2–வது தெருவை மீண்டும் நிர்வாக நடவடிக்கைகளில் புறக்கணிக்கப்படும் நிலை தொடர்ந்தது. இதனால், முந்தைய அலட்சியம் ஒரு தனிப்பட்ட நிகழ்வு அல்ல; மாறாகத் தொடர்ச்சியான நிர்வாகப் போக்கின் வெளிப்பாடாகும் என்பது தெளிவாகிறது.

(11.) 2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல், பெருநகர சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தால் (CMWSSB) "ஈஞ்சம்பாக்கம் பாதாள சாக்கடைத் திட்டம்" செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் கஸ்தூரிபாய் நகர் பகுதியில் பாதாள சாக்கடைக் குழாய்கள் அமைப்பதற்காகப் பல தெருக்களில் சாலை வெட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இப்பணிகள் நிறைவடைந்ததைத் தொடர்ந்து, சாலை மீளமைப்புப் பணிகளை மேற்கொள்ள தேவையான தடையில்லாச் சான்றிதழ் (No Objection Certifcate) 15.06.2026 அன்று பெருநகர சென்னை மாநகராட்சிக்கு வழங்கப்பட்டது என்று மனுதாரர் முன்வைக்கிறார். இந்த நிலையை எதிர்மனுதாரர்கள் மறுத்தால், அதற்கான அதிகாரப்பூர்வ ஆவணங்களை இம்மாண்புமிகு முறைமன்றத்தில் தாக்கல் செய்யுமாறு அவர்களுக்கு உத்தரவிடப்பட வேண்டும்.

(12.) மேலும் இது தொடர்பாக, சாலை வெட்டுப் பகுதிகளைச் சீரமைப்பதற்காக பெருநகர சென்னை மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி கோரி, 2026 மார்ச் மாதத்தில் சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர்களுக்குப் பணி ஆணைகளை வழங்கியுள்ளது. அதன்படி, கஸ்தூரிபாய் நகர் 1 முதல் 9–வது தெருக்கள் வரை சாலை சீரமைப்புப் பணிகளை மேற்கொள்ள M/s. J.P. Enterprises நிறுவனத்திற்குப் பணி ஆணை வழங்கப்பட்டதாக மனுதாரர் அளிந்துள்ளார். இதன் மூலம், நிர்வாக ரீதியாகச் சாலை சீரமைப்புப் பணிகளை மேற்கொள்ளத் தேவையான அனைத்து அனுமதிகளும், ஒப்பந்தங்களும், நிர்வாக அனுமதிகளும் ஏற்கனவே வழங்கப்பட்டிருந்தன என்பது தெளிவாகிறது.

(13.) இருப்பினும், களநிலையைப் பரிசீலித்தால், கஸ்தூரிபாய் நகர் பகுதியில் உள்ள பிற தெருக்களில் சாலை சீரமைப்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்ட போதிலும், கஸ்தூரிபாய் நகர் 2–வது தெருவில் மட்டும் பணி முழுமையாக நிறைவேற்றப்படாமல், திட்டமிட்ட முறையில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக மனுதாரர் தெரிவிக்கிறார். இதற்கான காரணத்தை எதிர்மனுதாரர்கள் இதுவரை எந்த ஆவணத்தின் மூலமும் விளக்கவில்லை. இந்த வேறுபட்ட

அணுகுமுறைக்கு என்ன நிர்வாகக் காரணம் என்பதை விளக்குவது எதிர்மனுதாரர்களின் பொறுப்பாகும்.

(14.) இவ்வழக்கின் மிக முக்கியமான அம்சம் என்னவென்றால், தெருப்பெயர் பலகை தொடர்பான முந்தைய வழக்கிலும் கஸ்தூரிபாய் நகர் 2–வது தெருவே மட்டும் புறக்கணிக்கப்பட்டது. தற்போது சாலை சீரமைப்புப் பணியிலும் அதே 2–வது தெருவே மீண்டும் புறக்கணிக்கப்பட்டுள்ளது. ஒரே தெரு இரண்டு வெவ்வேறு நிர்வாகப் பணிகளிலும் தொடர்ச்சியாகப் பின்தள்ளப்படுவது வெறும் தற்செயலான நிகழ்வாகக் கருத முடியாது. இத்தகைய நிகழ்வுகளின் தொடர்ச்சி, நிர்வாகம் சமமான முறையில் செயல்பட்டதா என்ற கேள்வியை எழுப்புகிறது; அதனை இம்மாண்புமிகு முறைமன்றம் ஆய்வு செய்வது அவசியமாகிறது. அதிகாரிகள் தங்களது பதில்களில் ''பணிகள் நடைபெற்று வருகின்றன'', விரைவில் முடிக்கப்படும்'' போன்ற பொதுவான விளக்கங்களை வழங்கினாலும், ஏன் கஸ்தூரிபாய் நகர் 2–வது தெரு மட்டும் மீண்டும் மீண்டும் பின்தள்ளப்பட்டது என்பதற்கு எந்தவித குறிப்பிட்ட காரணத்தையும் இதுவரை வெளிப்படுத்தவில்லை. இந்த மௌனமே, மனுதாரர் முன்வைக்கும் தொடர்ச்சியான நிர்வாகப் புறக்கணிப்பு குறித்து வாதத்திற்குக் கூடுதல் முக்கியத்துவத்தை அளிக்கிறது.

(15.) மேலும், தெருப்பெயர் பலகை தொடர்பான மேற்கண்ட வாதங்களுக்கு துணையாக, மனுதாரருக்குக் கிடைக்கப்பெற்ற ஒரு அதிகாரப்பூர்வ ஆவணச் சான்று இங்கு பணிவுடன் முன்வைக்கப்படுகிறது. பெருநகர சென்னை மாநகராட்சியின் Bus Routes Roads Department (BRR) ஒப்பந்தப்புள்ளி எண் B.R.R.C. No.B3/3701/2024-2 (Tender ID: 2024_CoC_488013_1) மூலம், மண்டலம் 9 முதல் மண்டலம் 15 வரையிலான உட்புற சாலைகள் மற்றும் BRR பேருந்து சாலைகளில் உள்ள 3,340 தெருப்பெயர் பலகைகளை மாற்றி, டிஜிட்டல் முறையில் அச்சிடப்பட்ட புதிய பலகைகளை நிறுவும் பணிக்கு ஒப்பந்தம் மேற்கொண்டிருந்தது என்பது அரசு மின்–கொள்முதல் தளத்தில் (tntenders.gov.in) அதிகாரப்பூர்வமாகப் பதிவாகியுள்ளது. இப்பணிக்கான Acceptance of Interest (AOC) நாள் 14.11.2024 அன்று M/s. Hariway Lines Private Limited நிறுவனத்திற்கு, மொத்த ஒப்பந்த மதிப்பு INR 7,34,86,870.06–க்கு, 120 நாள் பணி நிறைவுக் காலத்துடன் (அதாவது 14.03.2025–க்குள் பணி நிறைவடைய வேண்டும் என்ற நிபந்தனையுடன்) வழங்கப்பட்டுள்ளது. மனுதாரர் வசிக்கும் கோட்டம்–194 ஈஞ்சம்பாக்கம் பகுதி இவ்வொப்பந்தத்தின் புவியியல் வரம்பான மண்டலம்–15–க்குள் அமைந்துள்ளதால், கஸ்தூரிபாய் நகர் 2–வது தெரு இத்திட்டத்தின் எல்லைக்குள் வந்ததா என்பதும், வந்திருந்தால் ஒப்பந்தப்படி நிர்ணயிக்கப்பட்ட 14.03.2025 காலக்கெடுவிற்குள் அத்தெருவில் ஏன் பலகை நிறுவப்படாமல் இருந்தது என்பதும், வரவில்லை எனில் மண்டலம் முழுவதையும் உள்ளடக்கிய இந்தத் தொகுப்புத் திட்டத்திலிருந்தும் மனுதாரரின் தெரு மட்டும் ஏன் விலக்கப்பட்டது என்பதும், தெளிவுபடுத்தப்பட வேண்டிய முக்கியமான கேள்விகளாக மனுதாரரால் இங்கு எழுப்பப்படுகின்றன. இக்கேள்விகளுக்கான ஆவணப்பூர்வமான பதிலை வழங்குவது எதிர்மனுதாரர்களின் கடமையாகும். இத்தொடர்பான ஒப்பந்தச் சுருக்க அறிக்கை (Tender Summary Report), நிதி மதிப்பீட்டு அறிக்கை (Finance Bid Evaluation) மற்றும் Acceptance of Contract ஆவணம் ஆகியவை இணைப்பு ஆவணம் எண் 24 ஆக இத்துடன் சமர்ப்பிக்கப்படுகின்றன.

(16.) மேற்கூறிய நிகழ்வுகள் அனைத்தையும் ஒருங்கிணைத்துப் பரிசீலித்தால், இவ்வழக்கு ஒரு தனிப்பட்ட புகார் அல்லது ஒரு தெருவில் நடைபெற்ற சாதாரண நிர்வாகத் தாமதம் என்ற வரம்பைத் தாண்டி, நிர்வாகச் சீர்கேடு (maladministration), வேண்டுமென்றே செய்யப்பட்ட அலட்சியம் (Wilful Negligence), கடமை தவறுதல் (Dereliction of Duty), மற்றும் நியாயமற்ற நிர்வாக நடைமுறை (Arbitrary Administrative Action) ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு தீவிரமான பொதுநல விவகாரமாக மாறியுள்ளது.

(17.) தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், 2014–ன் பிரிவு 2(8)–இன்படி, ஒரு நிர்வாக நடவடிக்கை நியாயமற்றதாக, அநீதியானதாக, பாரபட்சமானதாக, ஒடுக்குமுறையானதாக, அல்லது வேண்டுமென்றே அலட்சியம் மற்றும் தாமதத்துடன் மேற்கொள்ளப்பட்டால் அது Maladministration என வரையறுக்கப்படுகிறது. இவ்வழக்கில், மனுதாரர் வசிக்கும் தெரு மட்டும் இரண்டு தனித்தனி நிர்வாகப் பணிகளிலும் (தெருப்பெயர் பலகை மற்றும் சாலை சீரமைப்பு) தொடர்ச்சியாகப் புறக்கணிப்பட்டிருப்பது, இம்மாண்புமிகு முறைமன்றம் இவ்வரையறையைப் பயன்படுத்திப் பரிசீலிக்க வேண்டிய அவசியத்தை ஏற்படுத்துகிறது.

(18.) மேலும், இச்சட்டத்தின் பிரிவு 8(1)–ன்கீழ், சாட்சிகளை வரவழைத்தல், ஆவணங்களைக் கோருதல் உள்ளிட்ட 1908–ம் ஆண்டு சிவில் நடைமுறைச் சட்டத்தின்படியான முழு அதிகாரங்களும் நடுவருக்கு உண்டு, மேலும், பிரிவு 7 (ii) (c) மற்றும் 12 (1) (c) ஆகியவை, வேண்டுமென்றே செய்யப்பட்ட அலட்சியம் அல்லது கடமைத் தவறுதலால் பொதுமக்களுக்குக் குறைபாடு ஏற்பட்டிருப்பது கண்டறியப்பட்டால், அதற்குப் பொறுப்பான அதிகாரிகள் மீது உரிய துறைரீதியான நடவடிக்கையைப் பரிந்துரைக்கும் அதிகாரத்தை இம்மாண்புமிகு முறைமன்றத்திற்கு வழங்குகின்றன. மேலும், தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் நடத்தை விதிகள், 1973–ன் விதி 20–ன்படி, ஒவ்வொரு அரசு ஊழியரும் தனது பணியில் முழுமையான நேர்மையையும் (Absolute Integrity), கடமைப் பற்றினையும் (Devotion to Duty) நிலைநிறுத்த வேண்டும்; பொய்யான பூர்த்தி அறிக்கைகளை அரசுப் பதிவேடுகளில் பதிவிடுவது இவ்விதி 20–க்கு முற்றிலும் முரணான நடத்தையாகும்.

(19.) மேலும், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பிரிவு 14–ன்படி, 28 தெருக்களில் 27 தெருக்களுக்குப் பலகை அமைத்துவிட்டு மனுதாரரின் தெருவை மட்டும் புறக்கணித்தது சமத்துவ உரிமையின் நேரடி மீறலாகும். மாண்புமிகு உச்சநீதிமன்றம் சாமேலி சிங் எதிர் உத்தரப் பிரதேச அரசு (Chameli Singh v. State of U.P.) மற்றும் ஒல்கா டெல்லிஸ் எதிர் பம்பாய் மாநகராட்சி (Olga Tellis v. Bombay Municipal Corporation) வழக்குகளில் வழங்கிய தீர்ப்புகளின்படி, குடிமக்களுக்குச் சரியான குடிமை வசதிகளை வழங்குவது அரசியலமைப்புச் சட்டப் பிரிவு 21–ன் கீழ் அடிப்படை வாழ்வுரிமையின் ஒரு பகுதியாகும்.

(20.) இவ்வழக்கில் மேலும் குறிப்பிடத்தக்க அம்சம் என்னவென்றால், மண்டலம்–15 அலுவலர்களின் செயல்பாடுகள் குறித்து இம்மாண்புமிகு முறைமன்றம் ஏற்கனவே ஆணை எண் 18/மா/2023, நாள் 28.02.2023–இல், விரிவாக ஆய்வு செய்து, அங்குள்ள கள அலுவலர்களின் அலட்சியம், நிர்வாகப் பொறுப்பின்மை மற்றும் மேற்பார்வைக் குறைபாடுகள் குறித்துக் கடுமையான கருத்துக்களைப் பதிவு செய்துள்ளது. அந்த ஆணையில், களப்பணி அலுவலர்கள் அலட்சியமாகவும் மந்தமாகவும் செயலற்றும் இருந்ததில் முறைமன்றம் ஆழ்ந்த

அதிர்ச்சி அடைந்ததாகவும், அத்தாமதத்திலும் கடமை தவறுதலிலும் ஈடுபட்ட அனைத்து அதிகாரிகள் மீதும் கடுமையான ஒழுங்கு நடவடிக்கை தொடங்கப்பட வேண்டும் எனவும் உத்தரவிட்டுள்ளது. இவ்வழக்கிலும் மனுதாரர் முன்வைத்துள்ள நிகழ்வுகளைப் பார்க்கும்போது, மண்டலம் 15–ல் முன்பே சுட்டிக் காட்டப்பட்ட அதே நிர்வாகப் பொறுப்புணர்வு மற்றும் மேற்பார்வைக் குறைபாடுகள் மீண்டும் வெளிப்படுகின்றன என மனுதாரர் வாதிடுகிறார். எனவே, ஆணை எண் 18/மா/2023–ல் வகுக்கப்பட்ட கொள்கைகள் மற்றும் காரணங்களை இவ்வழக்கிலும் பொருத்தி ஆய்வு செய்து, தேவையான வழிகாட்டுதல்களை வழங்குமாறு பணிவுடன் வேண்டப்படுகிறது.

(21.) இவ்வழக்கில் மனுதாரர் முன்வைத்துள்ள குற்றச்சாட்டுகள் அனைத்தும் அதிகாரிகளைத் தனிப்பட்ட முறையில் குறைகூறுவதற்காக அல்ல. மாறாக, பொது நிர்வாகம் சட்டத்திற்கு உட்பட்டு, வெளிப்படைத்தன்மையுடன், சமமான முறையில் செயல்பட வேண்டும் என்ற அடிப்படைக் கொள்கையை நிலைநாட்டும் நோக்கத்திலேயே இந்த முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பொதுமக்கள் அளிக்கும் மனுக்கள், உண்மையான கள ஆய்வின் அடிப்படையில் தீர்வு காணப்பட வேண்டும் என்பதே மனுதாரரின் அடிப்படை கோரிக்கையாகும்.

(22.) மேற்கண்ட அனைத்து உண்மைகள், ஆவணங்கள், நிகழ்வுகளின் காலவரிசை மற்றும் சட்டப்பிரிவுகள் ஆகியவற்றை ஒதுருங்கிணைத்துப் பரிசீலித்தால், இவ்வழக்கில் இம்மாண்புமிகு முறைமன்றத்தின் தலையீடு அவசியமானது என்று மனுதாரர் பணிவுடன் சமர்ப்பிக்கிறார். நிர்வாகத்தின் செயல்பாடுகள் சட்டத்திற்கு உட்பட்டவையா, நியாயமானவையா, பாரபட்சமற்றவையா என்பதை ஆராய்ந்து, உரிய நிவாரணங்களையும் வழிகாட்டுதல்களையும் வழங்குவது நீதியின் நலனுக்கும் நல்லாட்சியின் அடிப்படைக் கொள்கைகளுக்கும் ஏற்றதாக இருக்கும்.

வேண்டுகோள் (PRAYER)

மேற்கூறிய உண்மைகள், ஆவணச் சான்றுகள், சட்டப்பிரிவுகள் மற்றும் இவ்வழக்கின் தனித்துவமான சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு, இம்மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்கள், நீதியின் நலனையும், நல்லாட்சியின் அடிப்படைக் கொள்கைகளையும் நிலைநாட்டும் பொருட்டு, பின்வரும் உத்தரவுகளைப் பிறப்பிக்குமாறு முறையீட்டு மனுதாரர் மிகவும் பணிவுடன் வேண்டிக் கொள்கிறார்:–

(a) எதிர்மனுதாரர்களின் செயல்பாடுகள், தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், 2014–ன் பொருளில் "Maladministration" (நிர்வாகச் சீர்கேடு) மற்றும் "Wilful Negligence" (வேண்டுமென்றே செய்யப்பட்ட அலட்சியம்) ஆகியவற்றின் வரையறைக்குள் வருவதாக இம்மாண்புமிகு முறைமன்றம் பதிவு செய்ய வேண்டும் என வேண்டப்படுகிறது;

(b) கஸ்தூரிபாய் நகர் 2–வது தெரு தொடர்பாக, தெருப்பெயர் பலகை அமைப்பதில் ஏற்பட்ட நீண்ட கால தாமதம் மற்றும் சாலை வெட்டு சீரமைப்புப் பணிகளில் ஏற்பட்ட தொடர்ச்சியான காலதாமதம் ஆகியவை குறித்து சம்பந்தப்பட்ட அனைத்து அசல் ஆவணங்களையும், பதிவேடுகளையும், கோப்பு குறிப்புகளையும், பணி ஆணைகளையும், ஆய்வு அறிக்கைகளையும், Completion Reports–களையும் எதிர்மனுதாரர்களிடமிருந்து பெற்று ஆய்வு செய்ய உத்தரவிட வேண்டும்;

(c) ஒப்பந்தப்புள்ளி எண் B.R.R.C. No.B3/3701/2024-2 (Tender ID: 2024_CoC_488013_1) தொடர்பான முழுமையான ஒப்பந்தக் கோப்பு, பணி எல்லைப்பட்டியல் (Scope of Work / Street List), Board Installation Completion Report, Site Inspection Register மற்றும் Measurement Book ஆகியவற்றை தாக்கல் செய்யுமாறும், கஸ்தூரிபாய் நகர் 2–வது தெரு இத்திட்டத்தின் எல்லைக்குள் வந்ததா என்பதையும், வந்திருந்தால் ஒப்பந்தப்படி நிர்ணயிக்கப்பட்ட 14.03.2025 காலக்கெடுவிற்குள் ஏன் பலகை நிறுவப்படவில்லை என்பதையும், வரவில்லை எனில் ஏன் விலக்கப்பட்டது என்பதையும் எழுத்துப்பூர்வமாக விளக்கமளிக்குமாறும் எதிர்மனுதாரர்களுக்கு உத்தரவிட வேண்டும்;

(d) எதிர்மனுதாரர் 4 (திரு. சந்திரசூடன்) மீது, தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் நடத்தை விதிகள், 1973–ன் விதி 20 மற்றும் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், 2014–ன் பிரிவு 7 (ii) (c) மற்றும் 12(1) (c) ஆகியவற்றின் கீழ், குறைந்தபட்சம் ஐந்து முறை பொய்யான உண்மைக்கு மாறான அறிக்கைகள் அரசுத் தளங்களில் பதிவுச் செய்ததற்காக முறையான துறைரீதியான ஒழுங்கு நடவடிக்கை (Charge Memo) உடனடியாகத் தொடங்கப்பட வேண்டும் என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு நேரடி உத்தரவு பிறப்பிக்கப்பட வேண்டும்;

(e) தெருப்பெயர் பலகை மற்றும் சாலை சீரமைப்புப் பணிகள் ஆகிய இரண்டிலும் கஸ்தூரிபாய் நகர் 2–வது தெரு மட்டும் ஏன் தொடர்ச்சியாகப் புறக்கணிக்கப்பட்டது என்பது குறித்து பொறுப்பான அதிகாரிகளிடமிருந்து தனித்தனி Written Statement பெற்று, தேவையானால் மேலும் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப் பரிந்துரைக்க வேண்டும்;

(f) ஆணை எண் 18/மா/2023–ல் இம்மாண்புமிகு முறைமன்றம் மண்டலம்–15 அலுவலர்கள் குறித்துப் பதிவு செய்துள்ள கருத்துகளையும் வழிகாட்டுதல்களையும் கருத்தில் கொண்டு, தற்போதைய வழக்கிலும் அதேபோன்ற நிர்வாகக் குறைபாடுகள் மீண்டும் நிகழ்ந்துள்ளனவா என்பதை ஆய்வு செய்து, தேவையான நிர்வாக மற்றும் துறைரீதியான உத்தரவுகளைப் பிறப்பிக்க வேண்டும்;

(g) எதிர்காலத்தில் இதுபோன்ற சூழ்நிலைகள் மீண்டும் ஏற்படாதவாறு, பொதுமக்கள் அளிக்கும் புகார்களைக் கள ஆய்வு மேற்கொள்ளாமல் "Completed" அல்லது "Closed" என முடிப்பதைத் தவிர்க்கும் வகையில், ஒவ்வொரு புகார் மூடலுக்கும் புகைப்படச் சான்று மற்றும் மேற்பார்வை அதிகாரியின் இணை–கையொப்பம் கட்டாயமாக்கும் தணிக்கை SOP உருவாக்குமாறும், மண்டலம்–15 அலுவலர்களுக்கு முதல்வரின் முகவரி துறை / மத்திய அரசு போர்ட்டல் மனுக்களை உரிய கால வரம்பிற்குள் உண்மையாகக் கையாள வேண்டும் என்ற எழுத்துப்பூர்வ வழிகாட்டுதலைப் பிறப்பிக்குமாறும், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் மற்றும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MAWS) துறையின் அரசு செயலாளர் ஆகியோருக்கு உத்தரவிடப்பட வேண்டும்; மற்றும்

(h) இவ்வழக்கின் சூழ்நிலைகளில், இம்மாண்புமிகு முறைமன்றம் நீதியின் நலனுக்காகப் பொருத்தமானதாகக் கருதும் இன்னும் பிற உத்தரவுகள், வழிகாட்டுதல்கள் மற்றும் நிவாரணங்களையும் வழங்க வேண்டும்."

7. மனுதாரர் 21.08.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

"பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்–15 சோழிங்கநல்லூர்–ஈஞ்சம்பாக்கம் (கோட்டம் 194) கஸ்தூரிபாய் நகர் 2–வது தெரு, வெட்டுவாங்கேணி, ஈஞ்சம்பாக்கம், சென்னை 600 115–ல் "சிங்கார சென்னை 2.0" திட்டத்தின் கீழ் உடனடியாக தெருப்பெயர் பலகை அமைக்கக் கோரி பல அரசு அலுவலகங்களுக்கு குறிப்பாக குடியரசு தலைவர் அலுவலகம் மற்றும் முதலமைச்சர் தனிப்பிரிவிற்கு மனு அளிக்கும் போது பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 15–ன் அலுவலர்கள் ஒவ்வொரு முறையும், தவறான தகவல்களை வழங்கி வருகிறார்கள்.

இம்முறைமன்றத்தில் மனு அளித்தபின் எனது கோரிக்கையான கஸ்தூரிபாய் நகர் 2–வது தெருவிற்கு பெயர் பலகை அமைத்துக் கொடுத்துள்ளார்கள். ஆனால், இந்த சிறு பணி செய்வதற்கு பல வருடங்களாக மிகவும் போராடி பெற வேண்டியுள்ளது. எனவே பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 15–ல், இவ்வாறான மனுக்கள் பெறப்படும் போது அதில் தனிக் கவனம் செலுத்தி பொதுமக்களின் குறைகளை தீர்க்க அறிவுறுத்துமாறு இம்முறைமன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

இதுசம்பந்தமாக எனது எழுத்துபூர்வமான வாதுரையை இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு சமர்ப்பிக்கின்றேன்."

8. எதிர்மனுதாரர் தரப்பில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 15–ன் இளநிலைப் பொறியாளர் 21.08.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

"பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 15, பகுதி 44, கோட்டம் 194, ஈஞ்சம்பாக்கம் கஸ்தூரிபாய் நகர் 2வது தெருவில் பெயர் பலகை 06.02.2026 அன்று பொருத்தப்பட்டுள்ளது என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. பெயர் பலகை வைப்பது குறித்து தவறான தகவல்களை பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 15–ன் அலுவலர்கள் அளித்திருப்பின், அது ஏற்புடையதல்ல என்று கருதப்படுகிறது என்ற விவரத்தினை இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்."

9. மனுதாரரின் மனு, விசாரணையின்போது நேரில் ஆஜராகி பதிவு செய்யப்பட்ட வாக்குமூலம், எழுத்துபூர்வமான வாதுரை மற்றும் எதிர்மனுதாரரான பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 15–ன் மண்டல அலுவலரின் அறிக்கை மற்றும் இளநிலைப் பொறியாளரின் பதிவு செய்யப்பட்ட வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:–

"பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்–15 சோழிங்கநல்லூர்–ஈஞ்சம்பாக்கம் (கோட்டம் 194) கஸ்தூரிபாய் நகர் 2–வது தெரு, வெட்டுவாங்கேணி, ஈஞ்சம்பாக்கம், சென்னை 600 115–ல் "சிங்கார சென்னை 2.0" திட்டத்தின் கீழ் உடனடியாக தெருப்பெயர் பலகை அமைக்கக் கோரி பல அரசு அலுவலகங்களுக்கு குறிப்பாக குடியரசு தலைவர் அலுவலகம் மற்றும் முதலமைச்சர் தனிப்பிரிவிற்கு மனு அளிக்கும் போது பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 15–ன் அலுவலர்கள் ஒவ்வொரு முறையும், தவறான தகவல்களை பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 15–ன் அலுவலகத்தால் வழங்கப்படுகிறது என்பதும், இம்முறைமன்றத்தில் மனு அளித்தபின்பு தான், தனது கோரிக்கையான கஸ்தூரிபாய் நகர் 2–வது தெருவிற்கு பெயர் பலகையை பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 15–ன் அலுவலகத்தால் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது என்பதும், இந்த சிறு பணி செய்வதற்கு பல வருடங்களாக மிகவும் போராடி பெற வேண்டியுள்ளது என்பதும், இவ்வாறு தாமதமாக செயல்படும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 15–ன் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது துறைரீதியான

நடவடிக்கை எடுக்குமாறும், இவ்வாறான மனுக்கள் பெறப்படும் போது அதில் தனிக் கவனம் செலுத்தி பொதுமக்களின் குறைகளை தீர்க்க அறிவுறுத்தி பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 15ன் அதிகாரிகளுக்கு உரிய ஆணையினை பிறப்பிக்க கோரியிருப்பது மனுதாரரின் மனு, எழுத்துபூர்வமான வாக்குமூலம் மற்றும் விசாரணையின்போது நேரடியாக பதிவு செய்யப்பட்ட வாக்குமூலம் ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

மனுதாரர் குறிப்பிட்டுள்ள பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 15, பகுதி 44, கோட்டம் 194, ஈஞ்சம்பாக்கம் கஸ்தூரிபாய் நகர் 2வது தெருவில் பெயர் பலகை பொருத்தப்பட்டுள்ளது என்பதும், பெயர் பலகை வைப்பது குறித்து தவறான தகவல்களை பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 15–ன் அலுவலர்கள் அளித்திருப்பின், அது ஏற்புடையதல்ல என்று கருதப்படுகிறது என்பதும் எதிர்மனுதாரர் தரப்பில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 15–ன் இளநிலைப் பொறியாளரால் பதிவு செய்யப்பட்ட வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், மனுதாரர் குறிப்பிட்டுள்ள பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 15, பகுதி 44, கோட்டம் 194, ஈஞ்சம்பாக்கம் கஸ்தூரிபாய் நகர் 2வது தெருவில் பெயர் பலகை 06.02.2026 அன்று பொருத்தப்பட்டுள்ளது என்றும், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 15–ன் இளநிலைப் பொறியாளரால் பதிவு செய்யப்பட்ட வாக்குமூலத்தில் தெரிவித்திருந்தாலும், மனுதாரர் தனது எழுத்துபூர்வமான வாதுரையில் ஈஞ்சம்பாக்கம் பாதாள சாக்கடைத் திட்டத்தின் கீழ் பாதாள சாக்கடை குழாய்கள் அமைத்தபின், கஸ்தூரிபாய் நகர் பகுதியில் உள்ள பிற தெருக்களில் சாலை சீரமைப்பு பணிகள் முன்னெடுக்கப்பட்ட போதிலும் கஸ்தூரிபாய் நகர் 2வது தெருவிற்கு மட்டும் பணி முழுமையாக நிறைவேற்றப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள புகார் தொடர்பாக உரிய நடவடிக்கை விரைந்து மேற்கொள்ளவும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 15–ன் மண்டல அலுவலருக்கு அறிவுறுத்துமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 29–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. வெ. ஸ்ரீதர்,
கதவு எண் 2/1789,கஸ்தூரிபாய் நகர், 2–வது தெரு,
வெட்டுவாங்கேணி, ஈஞ்சம்பாக்கம், சென்னை–600 115.

(2) ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி
ரிப்பன் மாளிகை, சென்னை 600 003.

(3) மண்டல அலுவலர், மண்டலம் 15,
பெருநகர சென்னை மாநகராட்சி
எண் 120, ராஜீவ் காந்தி சாலை, சோளிங்கநல்லூர், சென்னை 600 119.

(4) கண்காணிப்பாளர்/ ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
மழைநீர் வடிகால் துறை, பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை 600 003.

நகல் :

மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இ.கோ. / உதிரிகள்.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

11/10/26

செயலாளர்.